**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.124/2016** **Date:12.07.2023**
**(P.W– 1)**

திரு.கணேசன் த/பெ.துரைசாமி
**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. வா.சா.ஆ.6 ஆவணத்தில் என்ன சொத்து விவரம் எழுதப்பட்டுள்ளதோ அதே சொத்து விவரம் தான் 1950 வா.சா.ஆ.9 ஆவணத்திலும் உள்ளது என்றால், சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்தில் செக்கு பந்தியில் முத்துசாமி முதலியார் வீட்டிற்கு தெற்கு என உள்ளது என்றால், சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து விவரத்திற்கும் நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால், சரியல்ல. நான் வழக்கில் மேற்படி பத்திரத்தில் உள்ள புதிய புல எண் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல.

2. பிரதிவாதிகள் அனுமதியின் பேரில் கடை வைத்து நடத்தி வருவதாக நான் சொல்வது தவறு என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் க.ச.எண்.353/2 உள்ளார்கள் என்றால், சரிதான். பிரதிவாதிகள் அசல் வழக்கு எண்.171/2014 என்ற வழக்கில் அதன் பிரதிவாதிகள் வழக்கிற்கு பின்னிட்டு எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்பதால், அந்த வழக்கை வலியுறுத்தவில்லை என்றால், சரியல்ல. புல எண்.353/2 என்பது பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், அதனை பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றும் சொன்னால், சரியல்ல. க.ச..353/2 ல் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல. க.ச.353/2 க்கு உண்டான வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. க.ச.353/2 என் பெயரில் இல்லாததால் தான் அதற்கான வருவாய் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால்,சரியல்ல. க.ச.353/2 ல் நானும் என் முன்னுரிமையாளர்களோ ஒரு காலத்திலும் அனுபவத்தில் இல்லை என்றால், சரியல்ல. வாடகை ஒப்பந்தம் தாக்கல் செய்துள்ளேனா என்று கேட்டால், தாக்கல் செய்யவில்லை. வாடகை ஒப்பந்தம் பிரதிவாதியுடன் செய்துள்ளதாக சொல்வது

பொய் என்றால், சரியல்ல. வாடகை ஒப்பந்தம் குறித்து வழக்கிலோ பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால், சரிதான். பிரதிவாதிகள் க.ச.353/2ல் முழு உரிமையாளராக அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL

Digitally signed by S VADIVEL
Date: 2023.07.11 15:01:53 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.